செ. கு. எண்: 196 நாள்: 13.11.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**
## அவர்களின் அறிக்கை – 13.11.2018

மதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வைகை பூர்வீக பாசனப் பகுதி III மற்றும் வைகை பூர்வீக பாசனப் பகுதி II ல் உள்ள 5 கண்மாய்களுக்கு **14.11.2018 முதல் 21.11.2018** வரை உள்ள 7 நாட்களுக்கு 1525 மில்லியன் கனஅடியும், இதர வைகை பூர்வீக பாசனப் பகுதி II–க்கு **23.11.2018 முதல் 27.11.2018** வரை 4 நாட்களுக்கு 631 மில்லியன் கனஅடியும், பகுதி I–யை சார்ந்த நான்கு கண்மாய்களுக்கு **28.11.2018 முதல் 30.11.2018** வரை இரண்டு நாட்களுக்கு 69 மில்லியன் கன அடி, விரகனூர் மதகணையில் வழங்கவும், இதர வைகை பூர்வீக பாசனப் பகுதி I–க்கு 348 மில்லியன் கன அடி தண்ணீரை பகுதி I–இல் உள்ள நிலையூர் கால்வாயில் தேவைக்கேற்ப திறந்து விடுவதற்கும் சேர்த்து **வைகை அணையிலிருந்து** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு, உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**